DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No.123 /2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW- 5 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.அமுதா(மருத்துவர்) |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1 to A4 absent. u/s 355 BNSS petition filed and allowed.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 10.11.2025

---

**முதல் விசாரணை**

1. நான் தற்போது திருச்சி SRM மருத்துவகல்லூரியில் MS படித்து வருகிறேன். கடந்த 09.09.2017 தேதி காலை 7.45 மணியளவில் நான் திருவாடானை அரசுமருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வந்தபோது ஆலம்பாடி கிராமத்தைசேர்ந்த சீராளன் மனைவி காளிம்மாள் வயது 36/2017 என்பவரை அவரது கணவர் சீராளன் சிகிச்சைக்கு அழைத்து வந்தார். அவருக்கு IP No.2713/17 பிரகாரம் சிகிச்சைக்கு அ.னுமதித்து உள்நோயாளியாக சிகிச்சை அளித்தேன், பின்னர் அதே

தேதியில் அதே நேரத்தில் மேற்சொன்ன அதே கிராமத்தை சேர்ந்த சீராளன் மகள் யோகினி வயது 16/17 என்பவரை IPNO 2714/17 பிரகாரம் சிசிக்சைக்கு அனுமதித்து உள்நோயாளியாக சிகிச்சை அளித்தேன். மேற்படி இருவரும் தங்களை தெரிந்த 4 நபர்கள் தாக்கியதில் தங்களுக்கு காயம் ஏற்பட்டதாக தெரிவித்தனர். இருவருக்கும் அவர்களது இடது கையில் அருவாளால் வெட்டிய காயம் இருந்தது. அவர்களுக்கு சிசிக்சை அளித்து அவர்களுக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என காயச்சான்று வழங்கினேன். **காளியம்மாளின் காயச்சான்று அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. யோகினியின் காயச்சான்று அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்,.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. சிகிச்சைக்கு வந்த இருவரும் தங்களை அடையாளம்தெரிந்த நபர்கள் தாக்கினார்கள் என்று தெரிவித்தனர்என்றால் சரிதான். மேற்படி தாக்கியநபர்களின் பெயரை குறிப்பிட்டுசொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கமாக சிகிச்சைக்கு வருபவர்கள் பெயரை குறிப்பிட்டு சொன்னால் அதனை விபத்து குறிப்பேட்டில் குறிப்பிடுவது வழக்கம் என்றால் சரிதான். காளியம்மாள் தனக்கு இடது கையில் காயம் ஏற்பட்டதற்காக சிகிச்சைக்கு வந்தார் என்றால் சரிதான். காளியம்மாள் தனது விசாரணையில் தனக்கு வலது கையில் காயம் ஏற்பட்டதாக தெரிவித்திருந்தால் அது தவறு என்றால் தவறுதான்.

2. பொதுவாக விறகு வெட்டும்போது மேற்படி நபர்களுக்கு மேற்சொன்னவாறு காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரியல்ல. மேற்படி நபர்களுக்கு காயம் ஏற்பட்ட பகுதியில் விறகு வெட்டும்போது காயம் ஏற்பட வாய்ப்பில்லை. இருசக்கர வாகன விபத்தில் இடது பக்கமாக விழும்போது கூர்மையான பொருள் ஏதாவது பட்டு மேற்சொன்னவாறு காயம் எற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.